# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>இந்திய இலங்கை ஆடை வர்த்தக மாநாடு</u>

வேல்டெக்ஸ் இந்தியா (Worldex India) அமைப்பால் நடத்தப்படும் Intex Sri Lanka 2026 கண்காட்சியின் பக்க நிகழ்வாக இந்திய இலங்கை ஆடை வர்த்தக மாநாடு ஒன்று இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஆதரவுடன் கொழும்பிலுள்ள BMICH இல் நடத்தப்பட்டது. Intex Sri Lanka கண்காட்சியானது பிராந்தியத்தில் நடைபெறும் முன்னணி சர்வதேச ஆடை வர்த்தக கண்காட்சியாக காணப்படும் நிலையில் இந்தியாவிலிருந்து 80க்கும் அதிகமான கண்காட்சியாளர்கள், ஏற்றுமதி ஊக்குவிப்பு சபை மற்றும் துறைசார் அமைப்புகள் கலந்துகொண்டு ஆடை பெறுமதிச் சங்கிலியில் இந்தியாவின் ஆளுமையை வெளிக்காண்பித்திருந்தன.

PDEXCIL, TEXPROCIL மற்றும் MATEXCIL ஆகியவை உட்பட ஆடைத்துறை அமைச்சு மற்றும் வர்த்தக திணைக்களத்தின் கீழான முன்னணி ஏற்றுமதி சபைகளின் ஆதரவுடனான விசேட "Incredible Textiles of India" அரங்கம் ஒன்று அமைக்கப்பட்ட நிலையில் இதன் மூலமாக இந்தியாவின் பங்கேற்பானது உந்துசக்தியளிக்கப்பட்டது. இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் குறித்த இந்திய அரங்கத்துக்கு விஜயம் செய்ததுடன் துறைசார் பிரதிநிதிகள் மற்றும் இந்திய கண்காட்சியாளர்களுடன் கலந்துரையாடியிருதார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்கே , கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ சதுரங்க அபேசிங்கே ஆகியோர் இந்தக் கண்காட்சியில் உரை நிகழ்த்தியிருந்தனர். குறிப்பாக ஆடை மற்றும் ஆடை உற்பத்தி துறையில் இந்திய ஏற்றுமதியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் காணப்படும் வாய்ப்புகள் தொடர்பாக அவர்களால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டு வர்த்தக சம்மேளனங்கள் குறிப்பாக JAAF மற்றும் முன்னணி வர்த்தக நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள ஆடைத் தொழில் சார் நிறுவனங்கள் இடையிலான கலந்துரையாடல்களுக்கான சந்தர்ப்பங்களை இங்கு வழங்கியிருந்தன.

உயர் ஸ்தானிகர் அவர்கள் தனதுரையில், இந்திய இலங்கை வர்த்தக பங்குடைமையின் பலம், வலுவான விநியோக சங்கிலி தொடர்புகள் ஊடாக இருதரப்பு முதலீடுகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் வலுவாக்கல், மற்றும் ஆடைத் துறையில் தொழில்துறையினர் இடையிலான பங்குடைமை ஆகியவற்றை மேலும் வலுவாக்குவதற்கான முக்கியமான வாய்ப்புகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தியா இலங்கை இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளில் ஆடை மற்றும் ஆடை உற்பத்தி துறையானது மிகவும் முக்கியமான ஆதாரமாக காணப்படுகின்றது. இந்நிலையில் இந்திய இலங்கை ஆடை வர்த்தக மாநாடானது இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளைக் கண்டறியவும் வர்த்தக தொடர்புகளை மேலும் வலுவாக்கவும் வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

*********************

**கொழும்பு**
**08 ஆகஸ்ட் 2026**